# கதிர்காமக் கந்தன் பெயரில் வளிநடைப் பத்து
# கதிர்காமக் கந்தன் பெயரில் வளிநடைக் கும்மி

## பாகம் - 02




ஆக்கம் :


வைரமுத்து கணேசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ





**என்னுரை...**

கலியுக வரதனாம் கந்தப் பெருமான் சொந்த அடியார்களே உங்கள் அனைவருக்கும் எனது பணிவான வணக்கம்.

மெய்யடியார்களே! நான் 2007 இல் கதிர்காமக் கந்தன் பெயரில் வளிநடைக்கும்மி, வளிநடைப் பத்து என்னும் சிறு நூலை உங்கள் கைகளில் தவழ விட்டேன் அவை முதலாம் பாகமாகவும், 2008 இல் அதேபோல் வளிநடைக்கும்மியும் - பத்தும் 2ம் பாகமாகவும் உங்கள் கைகளில் தவழ வேண்டுமென்ற நோக்கத்தோடு என் அனுபவ அறிவுக்கு எட்டியவரை எழுதியுள்ளேன். இதில் ஏதும் குற்றம் குறைகள் இருப்பின் கற்றுணர்ந்த பெரியோர்கள் பொறுத்துக் கொள்ள வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

இங்ஙனம்
**வைரமுத்து கணேசன்**

வைரமுத்து கணேசன்
கலைமகள் வீதி,
சேனைக்குடியிருப்பு -02,
கல்முனை.

**12.06.2008**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

தந்தனத்தான தனதான - தனத்
தானதந்தனத் தானானா
தந்தனத் தான தனதான - தன
தான தந்தனத் தானானா

01. சங்கமான் கண்டிப் பிள்ளையாரே - சிவ
சக்தி மைந்தனே மூத்தவனே
சங்கத் தமிழ்க் கும்மி நான்பாட - நல்ல
தத்துவ முத்துக்கள் தாருமையா

02. நான் முகன் மார்பில் கலந்திருக்கும் - எங்கள்
நல்ல தமிழ்ச் செல்வ நாயகியே
அன்போடு உன்தன் அடிபணிந்தேன் - தாயே
அழகு தமிழ்க் கவி தாரும்மா

03. பிள்ளைக் கறியுண்ண வேண்டுமென்று - அன்று
பெற்றவள் கையாலே தானறுத்து
உள்ளத்தைப் பார்த்து வரமளித்த எங்கள்
உரிபோர்த்த சிவனும் காப்பாமே

04. வங்கக் கடலோரம் மலையமைய - இங்கே
வாவியும் வனமும் சேர்ந்தமைய
பொங்கு கடலலை தாலாட்ட - வேலன்
பூரித்திருப்பதைப் பாருமடி

05. மாயவன் மகளைத் தான்தேடி - வேலன்
வனத்தில் வேடனாயித் தானலைந்து
மாயமாய் வேங்கை மரமானகாடு - மங்கையே
இங்குதான் உள்ள தடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. வள்ளியோடு துள்ளி விளையாட - கந்தன்
வளமுள்ள வனமாய்த் தேர்ந்தெடுத்த
உள்ளத்தை அள்ளும் உகந்தமலை - என்ற
உண்மையை இங்கே பாருமடி

07. கந்தன் சுவாசித்த தென்றலிலே - பெண்ணே
கற்பூரவாசனை வீசுதடி
எந்த வினையும் அதுதீர்க்கும் - என்று
ஏந்திழையே கும்மிகொட்டுங்கடி

08. வாடாமலர் போல் முகமுடைய - எங்கள்
வடிவேல் முருகன் அருள் வேண்டி
கோடான கோடி மெய்யடியார் - இங்கே
கூடியிருப்பதைப் பாருங்கடி

09. சித்தர் முனிவர் ரிசிகளெல்லாம் - பெண்ணே
சிந்தனை தன்னையே ஒன்றாக்கி
முந்தை வினையை அறிந்து கொண்டு - கண்ணே
முத்திபெற வென்று இங்கமர்ந்து

10. உகந்தை முருகன் அடிபணிந்து - பெரும்
உத்தம நற்பேறு கண்பதற்கு
அகத்திலழுகனை தானிருத்தி - நித்தம்
அரிய பெரும் தவம் செய்கையிலே

11. பாரில் கலியன் பிறந்ததினால் - கண்ணே
பற்பல இடையூறு நேருமென்று
வேரில் பிறந்த மரமாகிப் - பெண்ணே
வெயிலுக்கு நிழலாய் நிற்பதைப்பார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. மரம்தடி செடிகொடி என்னவென்று - கந்தா
மனதில் பட்டதை நானியம்ப
இரக்கம் என்மீது காட்டுமையா - வேலா
இன்று மெடுத்த நானுரைக்க

13. தலவிருட்சங்கள் என்று சொன்னால் - கண்ணே
தத்துவ ஞானிகள் என்று எண்ணி
தலம் தேடி வருகின்ற பக்தர்களைப் - பெண்ணே
தற்காத்துக் கொள்வதைப் பாருங்கடி

14. மலையாய் இருப்பதும் ஓர்முனிதான் - என்று
மங்கையே மனதில் வைத்துக்கொண்டு
மலைவாசல் கணபதி தாழ்பணிந்து - பெண்ணே
மகிழ்ந்து கும்மி கொட்டுங்கடி

15. உகந்தைமுருகன் புகழ்கேட்டு - பெண்ணே
உள்ளத்தில் உற்சாக வெள்ளத்துடன்
அகந்தை விட்டு அகமகிழ்ந்து - கண்ணே
ஆறுமுகன் பதி செல்வோமடி

16. புனிதயாத்திரை செய்வதற்கு - இப்போ
புறப்பட்டு வந்துள்ள பக்தர்களே
கனிவோடு நேயத்தை கடைப்பிடித்து - நம்பி
கந்தன் கருணையைப் பெற்றிடுவோம்

17. உகந்தை முருகன் அடிபணிந்து - தினம்
உள்ளத்தைத் தூய்மையாய் வைத்துக்கொண்டு
சுகமாக யாத்திரை சென்றுவர - வென்று
சூழ்ந்து இருக்கின்ற - சுவாமிகளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. பாதுகாப்பற்ற வனம்தனிலே - கண்ணே
பாதுகாப்பாக நாம் செல்வதென்றால்
ஏதோவோர் காரணம் உள்ளதென்று - பெண்ணே
ஏற்ற தமிழ்க் கும்மி கொட்டுங்கடி

19. ஊசிக்குள் நுழைந்த நூல் போலப் - பெண்ணே
ஒன்றன்பின் ஒன்றாக நாம் போக
காசிக்குத் தேவர்கள் போகிறார்கள் - என்று
கானகப் பட்சியும் ஆசி சொல்லும்.

20. தென்கதிரைக் கந்தன் பதிதேடிக் - கண்ணே
தேவர்கள் போவதைப் பாருமென்று
மண்புழுக்கூட மனமகிழ்ந்து - பெண்ணே
மனமார நல்லாசி கூறுமடி

21. வானரம் கூட மனநிறைவாய்ப் - பெண்ணே
மரத்தின்மேலே வந்தமர்ந்து
போனவருசமும் வந்தவர்கள் - என்று
புன்னகைசெய்து மகிழுதடி

22. இந்தவருஷம்தான் இவர்வாறார் - என்று
இன்முகத்தோடு நமைப்பார்த்து
மந்தியும் வாயவிட்டுப் பேசுதென்று - இப்போ
மங்கையரே கும்மி கொட்டுங்கடி

23. வனவிலங்குகள் கூடிநின்று - பெண்ணே
வானவர் போவதைப் பாருமென்று
இனங்களின் பாசையில் பேசுதென்று - கண்ணே
இசையோடு கும்மி கொட்டுங்கடி

24. எந்தவழியால் நாம்எங்கு சென்று - பெண்ணே
எங்கள் முருகனைக் கண்டாலும்
அந்தவழியாலே நாம்திரும்பிக - கண்ணே
ஆழுக்கொருதிசை போயிடுவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25. இந்த வளிப்பாதை என்னவென்று - கண்ணே
எண்ணிநீ கொஞ்சம் பாருமடி
வந்தவளியாலே போகமாட்டோம் - என்று
வடிவேலன் தத்துவம் கூறுமடி

26. எந்தவளியோ நமக்கென்று - பெண்ணே
எண்ணிய எண்ணத்தை ஒன்றாக்கி
கந்தப்பெருமானை நெஞ்சில்வைத்துக் - கண்ணே
கைதட்டிக் கும்மி கொட்டுங்கடி

27. நம்பிக்கை நெஞ்சிலுனக்கிருந்தால் - பெண்ணே
நாடியதடைய நீ நினைத்தால்
நம்மால்தவறு நடக்காது - என்று
நங்கையரே கும்மி கொட்டுங்கடி

28. எத்தனையோ ஆண்டு யாத்திரையாய்க் - கந்தா
எண்ணம் நிறைவேற வேண்டுமென்று
இந்த வனத்திலே வாறேனப்பா - வேலா
என்மீது கருணை காட்டுமைய்யா

29. இந்தமுறை எந்தன் சிந்தனையில் - கந்தா
எந்தவோர் நினைவும் வையாமல்
உந்தனைமட்டும் நானினைத்து - அப்பா
உறுதியாய் இப்போது வாறேனையா

30. கந்தன் காலடி பட்டமண்ணாம் - பெண்ணே
கருணையுள்ளம் நிறைந்த மண்ணாம்
முத்தான செந்தமிழ் சிந்துமண்ணாம் - என்று
முத்தமிழால்க் கும்மி கொட்டுங்கடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31. மூட்டைமுடிச்சிக்கு உள்ளிருக்கும் - அந்த
முடிந்த பட்டுப் பையை யெல்லாம்
காட்டிலே அள்ளி நீ வீசாமல் - அதை
கண்ணும் கருத்துமாய் வையுமடி

32. காட்டு மிருகம் அதைச் சுவைக்க - அது
காணாத ஒவ்வாமை தான்காண
ஆட்டுவிக்கும் காலன் உயிர் கவர்ந்தால் - பெண்ணே
அதுவும் பாவமென் றெண்ணுமடி

33. தீயிலே இட்டுஅதை எரித்தால் - பெண்ணே
திரும்பவும் அத்தொல்லை இல்லையென்று
நாயிலும் கடையேன் நானுரைத்தேன் - இதை
நம்பினால் நம்பி நடவுமடி

34. நாவுக்குருசியாய் நாம்சமைத்துப் - பெண்ணே
நல்லபடியதை உண்டுவிட்டு
சாவுக்கு நாத்தத்தை தள்ளிவைத்தால் - கண்ணே
சற்றுச் சுகமாய் இருக்குமடி

35. வீட்டில் பல்வாழ்க்கை வாழ்ந்தாலும் - பெண்ணே
காட்டிலேயோர் வாழ்க்கை என்று எண்ணி
கூட்டு உறவை விட்டு விட்டுப் - பெண்ணே
குமரனை நெஞ்சிலே வையுமடி

36. சொற்பனம் தன்னிலே தான்வருவான் - கந்தன்
சோதனை வேதனை தானறிவான்
அற்புதம் இது வென்று பார்த்திருப்பான் - வேலன்
அன்புள்ள அடியாரைக் காத்திருப்பான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

37. குடும்பம் குடும்பமாய் வந்துவிட்டுப் - பெண்ணே
இடும்புச் சண்டை போடாதே
அடுப்பும் அடுத்தவர் சொத்து என்று - கண்ணே
அழகாய்க் கும்மி கொட்டுங்கடி

38. கூட்டுச் சமையலாய்ச் சேர்ந்துவந்து - பெண்ணே
கொஞ்சமும் நிம்மதி இல்லையென்று
ஏட்டுச் சுரக்காய்போல் வார்த்தைபேசிப் - பெண்ணே
ஏதேதோ சொல்லி உளறாதே

39. மூக்குமுகச்சுண்டு காட்டாதே - பெண்ணே
முன்விட்டுப் பின்னாலே தூற்றாதே
ஆக்கி அவிச்சிநான் போட்டிருக்கேன் - என்று
அலுப்புக் காட்டியும் பேசாதே

40. அண்டை அயலவர் நாத்தமெல்லாம் - பெண்ணே
அள்ளி நீ மூட்டையாய்க் கட்டிக் கொண்டு
கண்டஇடமெல்லாம் கதையாமல் - கண்ணே
கன்னித் தமிழ்க் கும்மி கொட்டுங்கடி

41. வேணாண்டாசாமி இந்தவளி - என்று
வேடிக்கையாகவும் பேசாதே
ஆணாகப் பெண்ணாக இருந்தாலும் - கண்ணே
அந்த வளியிலும் கிட்டாதே

42. உண்டு உறங்கும் இடமெல்லாம் - பெண்ணே
ஊத்தையாய் விட்டுற்றுப் போகாதே
இன்றோடு நாம்விட்டுப் போறோமென்றும் - கண்ணே
இதயத்தில் நினைவு வைக்காதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

43. உண்ணை உணவு கேட்டிடுவான் - கந்தன்
உண்பவர் போல நடித்திடுவான்
நண்பனைப்போல பழகிடுவான் - கண்ணே
நாளைக்கிச் சந்திப்போம் என்றிடுவான்

44. முருகன் மனிதனாய் உருமாறிப் - பெண்ணே
முன்னும் பின்னுமாய் நாம் நடக்க
கருணை கொண்டோர் மனமறிந்து - கண்ணே
கதைத்துப் பேசி வருவாரடி

45. கண்டது நின்டது உண்ண வேண்டும் - என்று
கனவிலும் பெண்ணே நினைக்காதே
உண்டது ஒன்றே திருப்தியென்று - இப்போ
உத்தமியே கும்மி கொட்டுங்கடி

46. ஆண்டுக் கொருமுறை எமைப்பறித்து - பெண்ணே
அமரர்கள் உண்பார்கள் என்று எண்ணி
வேண்டும் காய்கனி இலை குழையும் - பெண்ணே
விருப்பம் போல் நமக்கு ஈந்திடுமாம்.

47. கண்டால் பயம் வரும் முள்கூட - பெண்ணே
கர்வம் அடக்கித் தலைவணங்கி
மன்னாக தேவர்கள் வாழ்கவென்று - கண்ணே
மகிழ்ந்து நம்மை வாழ்த்துமடி

48. தெருவில் கிடப்பதும் கல்தானடி - பெண்ணே
சிலையாய் இருப்பதும் கல்தானடி
உருவில் உள்ளதை நாம்நினைத்தால் - கண்ணே
உள்ளத்தில் இன்பம் பொங்குமடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

49. பணம் கூடக் கண்மூடித் தூங்குதடி - கண்ணே
பத்து நாள் நிம்மதி என்று எண்ணி
மனம்கூட அதை எண்ணிப் பார்ப்பதில்லை - என்று
மங்கையரே கும்மி கொட்டுங்கடி

50. பருவம் வந்து அது பழுக்க - ஐயா
பதம் கெட்டுப் போச்சுதே என்று எண்ணி
உருவம் மாத்த நினைக்காதே - கந்தன்
உற்று அதனையே பார்க்கமாட்டான்

51. பழுத்த பழத்தின் மதிப்பறிந்து - நாமும்
பயபக்தி என்பதைக் கையாண்டு
வெழுத்த மனத்தோடு நாம் நடந்தால் - கந்தன்
வேண்டிய தெல்லாம் தந்திடுவான்

52. அடிமரம் தன்னிலே தீமூட்டிப் - பெண்ணே
ஆகாரம் சமைக்க எண்ணாதே
அடிவயிறென்று நீ நினைத்துக் - கண்ணே
அதற்கும் அன்பு காட்டுமடி

53. காவியுடையை அணிந்து விடு - பெண்ணே
கழுத்தில் ருத்ராக்கம் தரித்துவிடு
கூவிக் குமரனை அழைத்துவிடு - அவன்
கொஞ்சும் சிரிப்பொலி கேட்டுவிடு

54. ஓப்போடு என்று நீ பாடாமல் - பெண்ணே
ஓம்வேலா என்றுமே கூறுமடி
கூப்பிட்டசத்தம் கேட்டுவிட்டால் - கண்ணே
குமரன நிமிர்ந்து பார்ப்பானடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

55. பாதை தவறி நீ போனாலும் - பெண்ணே
பற்று அவன்மேலே வைத்துவிட்டால்
கோதையர் தங்களை விட்டுவிட்டு - கந்தன்
குடுகுடுகிழவனாய் வருவாரடி

56. எங்கே போகச்சாமி என்றிடுவான் - பெண்ணே
ஏன்வந்தீர் என்றுமே கேட்டிடுவான்
உங்களைப் போலதான் நானுமென்று - கண்ணே
உடனேகூட்டி வருவானடி

57. உள்ளத்தில் வள்ளி நினைவுவரக் - கந்தன்
ஊணுறக்கம் மெல்லாம் தான்மறந்து
வள்ளியைத்தேடி அலைந்த வனம் - என்று
மங்கையரே கும்மி கொட்டுங்கடி

58. கற்பனைக் கவ்வொன்றிருக்குதடி - கண்ணே
கல்லையும் துளைத்துப் பார்க்குமடி
அற்ப சுகத்தையும் தஞ்சமென்று - பெண்ணே
ஆடி அலைந்து திரியுமடி

59. கதிர்காமக் கந்தன் பதிமகிமை - கண்ணே
காதோடு சொல்கின்றேன் கேளுமடி
அதிசயம் என்று நீ கொள்ளாமல் - பெண்ணே
அடக்கி மனதை வையுமடி

60. கதி ரென்றால் ஒளியங்கு வீசுதடி - கண்ணே
காமம் தலைவிரித் தாடுதடி
எதிர்காலம் வாழ்வையே நாம் நினைத்தப் - பெண்ணே
எல்லாத்தை ஒன்றாக்கி வையுமடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

61. பத்தெட்டு வயதுத் தாத்தாவும் - பெண்ணே
மூவெட்டு வயது தான் திரும்பி
இந்தெட்டில் நானின்று இல்லையென்று - கண்ணே
ஏங்கித் தவிப்பதைப் பாருமடி

62. எல்லாக் குறையும் நிவர்த்தி செய்யும் - எங்கள்
எழில் கொஞ்சும் வேழமுகன் பதியாம்
செல்வக்கதிர்காமம் போகவேண்டும் - என்று
செந்தமிழ்க்கும்மி கொட்டுங்கடி

63. கங்கைக் கரையிலே வீற்றிருக்கும் - அந்தக்
கணபதி பாதம் நாம்பணிந்து
எங்கள் குறையையும் தீருமென்று - சொல்லி
ஏந்திழையே கும்மி கொட்டுங்கடி

64. கடலை அவல் பொங்கல் மோதகமும் - நல்ல
கற்கண்டு கருப்பட்டி சர்க்கரையும்
மடல் வாழை இலை கொண்டுபடைத்திடுவோம் - என்று
மங்கையரே கும்மி கொட்டுங்கடி

65. கதிரைமலையேறப் போவோமடி - பெண்ணே
கந்தன் மேல் உள்ளன்பு வையுமடி
பதிதேடி மலையேறி வாறெனென்று - சொல்லி
பாவையரே கும்மி கொட்டுங்கடி

66. மனக்குறை தீர்த்திடும் வேலவனே - எம்மேல்
மனது கொஞ்சம் நீ வையுமென்று
மனசார உன்னிடம் கேட்பேனென்று - சொல்லி
மாதரசே கும்மி கொட்டுங்கடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

67\. எத்தனையோ முறை மலையேறிக் - கந்தா
எந்தப் பயனுமே இல்லையென்றும்
சித்தம் கலங்காமல் வாறேனென்று - சொல்லி
சிற்றிடையே கும்மி கொட்டுங்கடி

68\. வள்ளி தெய்வானை நாயகனே - எங்கள்
வருங்கால பேர் சொல்லி வாழ்வதற்கு
பிள்ளைக் கனிவரம் தாருமென்று - சொல்லி
பொற்கொடியே கும்மி கொட்டுங்கடி

69\.
இத்தனை வைர முத்துக்களும் - பெண்ணே
அத்தனையும் உந்தன் சொத்து என்று
சிந்தனை நெஞ்சிலே வந்தாலே - கண்ணே
சிறந்த நற்பலன் கிட்டுமடி

70\. உகந்தை முருகன் புகழ்வாழி - நல்ல
உள்ளத்தில் வள்ளல்கள் தான் வாழி
தேககுகம் தரும் வேல்வாழி - நம்ம
தெய்வானை வள்ளியும் தான்வாழி

71\. உற்றுக் கேட்டோரும் தான்வாழி - பெண்ணே
உள்ளத்தில் வைப்போர் மிகவாழி
பற்றொடு ரசிப்போர் தான்வாழி - கண்ணே
பார்த்து இருப்போரும் வாழியதே

72\. யாத்திரைப் பக்தர்கள் தான்வாழி - கந்தன்
நாமமுரைப்போர் மிகவாழி
கார்த்திகேயன் பாதம் தான்வாழி - அவன்
கழலடி நம்பியோர் வாழியதே

73\. உண்டதைப் பங்கிட்டோர் தான்வாழி - நல்ல
உறவென்று வந்தோர் மிகவாழி
பண்டைத் தமிழர் குலம் வாழி - இதைப்
படிப்போரும் கேட்போரும் வாழியதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதிர்காமக் கந்தன் பெயரில் வழிநடைப் பத்து

என்ன வினைவந்தாலும் முன்னே நின்று
எப்போதும் அடியவரைக் காக்கவென்று
அன்போடு அழகுபதி கொண்டிருக்கும்
ஆனைமுகா சங்கமான் கண்டிவாழும்
அன்புருவே உன்பாதம் நான் பணிந்து
அடியார்கள் யாத்திரையை கவியாய்ப்பாட
என்குருவே வேழமுகா அடியேன் நாவில்
எப்போதும் நிறைந்திருந்து அருள் செய்வாயே

வண்டாடும் சோலைமலை வாழுகின்ற
வடிவேலா நெடியோனின் மருகா கந்தா
அன்போடு அமரபதம் அடையுமுன்னே
அடியார்கள் தம்மோடு வனத்திலே நாளும்
பன்னிருகை வேலவனே நடந்துவாறேன்
பட்சமுடன் என்மீது கருணைகாட்ட
முன்னவனே கதிர்காமம் உறையுந்தேவே
முருகோனே துணைநின்று ஜெயம் செய்வாயே

வாடினேன் நிறைவேறா நினைவு கொண்டு
வருவேனுன் பதிக்கென்று நேர்த்திவைத்தேன்
ஆடினேன் உன் புகழைப் பாடிப்பாடி
அனுதினமும் நினைத்தது நடக்குமென்று
கூடியே பக்தரெல்லாம் ஒன்று சேர்ந்து
குமரேசா உன்பதியை தேடியிப்போ
நாடி வந்தோம் கதிர்காமப் பதியைக்காண
நலமுடனே துணைநின்று ஜெயம் செய்வாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருப்போடு யாத்திரையாய் நான்நடந்து
வீரவேல் உன்பதியைச் சேர்வோமென்று
அரும்பிய ஆசையினால் அடிமையாகி
அப்பாநான் பெரும்பொதியும் சுமந்து செல்ல
துரும்பாக இளைத்து உடல் துடிக்குதையோ
சுந்தரனே உன்னருளைக் காணேனென்று
கரும்பாக இனிக்கின்ற நாமம் பெற்ற
கதிர்காமா துணைநின்று ஜெயம் செய்வாயே

வீணாக என்வாழ்வு கழியுதென்று
வித்தகனே உன்பாதம் நெஞ்சில்வைத்து
காணாத வனந்தனிலே நான் நடந்து
கதிர்வேலா ஓயாமல் உனை நினைத்து
ஆணவத்தை அடக்கவழி கிடைக்குமென்று
ஆறுமுகா உன்பதியைத் தேடிவாறேன்
கானகத்தே எப்போதும் உறையும்தேவே
கதிர்காமா துணைநின்று ஜெயம் செய்வாயே

வெருக்குலைந்து நானலைந்து தெருவில்நின்று
ஊழ்வினையோ இதுவென்று சொல்லிக்கொள்ள
திருக்குமரா உனைமறந்த நிலையினாலோ
திண்டாடித் தவிக்கின்ற நிலமைதந்தாய்
உருக்கமுடன் இப்போது நடந்துவாறேன்
உளமிரங்கி என்மீது கருணைகொண்டு
கருப்பொருளே கனகமயில் ஏறும்தேவே
கதிர்காமா துணைநின்று ஜெயம் செய்வாயே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வூரூராய் நான்நடந்து கடந்து இப்போ
உன்நாமம் மறவாமல கானகத்தில்
ஊர்ந்து வரும் எறும்பு போல் வருகின்றேனே
உமைபாலா எம்மீது கருணைகொண்டு
தீருமையா கால்கடுப்பு நோவு எல்லாம்
திருக்குமரா உனைநம்பும் அடியவர்க்கு
பேர்பெற்ற கதிர்காமம் உறையும் தேவே
பெருமானே துணைநின்று ஜெயம்செய்வாயே

வெள்ளியிலே எப்போதும் விரதமென்று
வேண்டாத உணவெல்லாம் விட்டுவிட்டு
கள்ளமில்லா நெஞ்சனாய் நானிருந்து
கதிர்வேலா கானகத்தே நடந்துவாறேன்
முள்ளையும் மலர் மெத்தையாக்கிவைக்கும்
முருகோனே என்மீது கருணைகாட்டும்
வள்ளலே கதிர்காமம் உறையும் தேவே
வடிவேலா துணைநின்று ஜெயம்செய்வாயே

வேண்டுதலை நிறைவேற்றி வைத்தாப்போல
வினைகளைய உன்னடியே தஞ்சமென்று
ஆண்டாண்டு காலமாய் உனைத்துதித்து
ஆறுமுகா இவ்வனத்தில் நடந்தும்கூட
கண்டாலும் உறவினர்கள் கதைப்பாரில்லை
கடன்கேட்டு வருவானோ என்றுஎண்ணி
கண்போல எப்போதும் காக்கும்தேவே
கதிர்காமா துணைநின்று ஜெயம் செய்வாயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையகத்தில் மானிட ஜென்மம் பெற்று
வாழ்நாளில் பலஇன்பம் கண்டபோதும்
ஐயகோ ஆறுமுகா உனைமறந்து
அறியாத மூடனாய் இருந்திட்டாலும்
மெய்யாக மனமுருகி உன்தன் நாமம்
வேல்முருகா வாயினிக்க உரைக்கின்றேனே
கையிலே வேலேந்தி நிற்கும் தேவே
கதிர்காமா துணை நின்று ஜெயம் செய்வாயே


வொன்றுமறியாத என் நெஞ்சகத்தில்
உறுதுணையாய் உள்ளே நீ அமர வேண்டும்
மன்றாடி உன்னிரு பாதம் தன்னை
மால்மருகா எப்போதும் வணங்க வேண்டும்
அன்றாடம் அரகரா ஓசைகேட்டு
ஆறுமுகா உன் புகழைப் பாட வேண்டும்
அன்று மின்றும் கதிர்காமம் உறையும் தேவே
அருட்கடலே துணை நின்று ஜெயம் செய்வாயே

வோடுகின்ற மாணிக்க கங்கை தன்னில்
வொருமனதாய் ஸ்நானம் செய்ய வேண்டும்
ஆடுகின்ற தீர்த்தம் பிணி தீர்க்குமென்று
அசையாத நம்பிக்கை கொள்ள வேண்டும்
பாடுகின்ற செந்தமிழ்ப் பாவின் ஓசை
பலதிசையும் கிடுகிடென முழங்க வேண்டும்
தேடிவந்தோம் கதிர்காமா வுன்பதிக்கு
தேசிகனே துணைநின்று ஜெயம் செய்வாயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளவால்தான் வயிறாரக் கனிகள் உண்ண
வனம்தனிலே பழுத்த பழம் தேடுமாப் போல்
பௌவியமாய் அடியவர்கள் ஒன்று கூடி
பரம்பொருளே உன்பதியை தேடியிப்போ
எவ்வளவோ சுமைசுமந்து கால் நடையாய்
எண்ணற்ற அடியவர்கள் நடந்துவாறோம்
சௌக்கியமாய் கதிர்காமப் பதியில் வாழும்
தங்கவேல் துணை நின்று ஜெயம் செய்வாயே

இவ்வளவு தூரம் நான் நடைநடந்து
இன்பமுடன் உன்புகழைப் பாடிவாறேன்
எவ்வளவோ பிழைதப்பு இருந்திட்டாலும்
எம்மீது சற்று நீ கருணை காட்டி
செவ்வேலே மனமகிழ்ந்து மயில் மீதேறி
தேவியர்கள் இருபுறமும் அமர்ந்திருக்க
இவ்வேளை கதிர்காமா இங்குவந்து
இன்பமுடன் துணைநின்று ஜெயம்செய்வாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனது வெளியீடுகளாக இதுவரை.....

01. சேனைக்குடியிருப்பு முத்துமாரியம்மன் பெயரில் பொன்னூஞ்சல் வைரவர் அகவல்.

02. அம்மன் அருட்பாக்கள், ஆதிசிவன் அருட் காவியம்

03. கொக்கட்டிச்சோலை தான்தோன்றிஸ்வரர் பத்து, மயானப்பத்து

04. சேனைக்குடியிருப்பு முத்து விநாயகர் பெயரில் கண்கொடுத்த கற்பகப்பத்து, திருக்குமரன் வரமருள் பத்து.

05. ஆழிப்பேரலையின் அனர்த்தக் காவியம்

06. கதிர்காமக் கந்தன் பெயரில் வளிநடைப்பத்து, வளிநடைக்கும்மி

07. கிட்டங்கிப் பிள்ளையார் பெயரில் பொன்னூஞ்சல்.

08. சேனைக்குடியிருப்பு முத்துமாரியம்மன் பெயரில் ஊர்வலக் கும்மி.

09. துறைநீலாவணை கண்ணகையம்மன் ஊர்வலக் கும்மி

10. கதிர்காமக் கந்தன் பெயரில் வழிநடைப்பத்து, வழிநடைக்கும்மி.

இவைகளையெல்லாம் நூல்வடிவமாக்க எனக்கு உதவி ஒத்தாசை புரிந்த அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org